செ.வெ.எண்: 467/2020 நாள்: 07.07.2020

**கன்னியாகுமரி மாவட்டத்தில் பல்வேறு துறைகள் மூலம் நடைபெறும் வளர்ச்சி திட்டப்பணிகள் முன்னேற்றம் குறித்து, மாவட்ட அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் மு.வடநேரே இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் மு.வடநேரே இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், பல்வேறு துறைகள் மூலம் நடைபெறும் வளர்ச்சி திட்டப்பணிகள், முன்னேற்றம் குறித்த, மாவட்ட அலுவலர்களுடனான ஆலோசனை கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வருவாய் கூட்டரங்கில் இன்று (07.07.2020) நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாவட்டத்திலுள்ள அனைத்து துறை சார்ந்த அலுவலர்களுடன், பல்வேறு துறைகள் வாயிலாக நடைபெற்று வரும் வளர்ச்சித்திட்டப்பணிகள் முன்னேற்றம் குறித்து, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கேட்டறிந்தார்கள். முந்தைய ஆலோசனை கூட்டத்தில், துறை சார்ந்த அலுவலர்களுக்கு ஒதுக்கப்பட்ட வளர்ச்சிப்பணிகள் குறித்து தனித்தனியே கேட்டறிந்து, அதை செயல்படுத்துவதில் இடையூறுகள் இருப்பின் அதற்கான மாற்று ஆலோசனைகளை வழங்கி, வளர்ச்சிப்பணிகளை விரைந்து முடிக்கவும், தரமானதாகவும் இருக்க வேண்டுமென சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள். தொடர்ந்து, வளர்ச்சித் திட்ட பணிகள் தொடர்பாக நிலுவையிலுள்ள அனைத்து பணிகளையும் விரைவாக முடிக்க வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுரைகள் வழங்கினார்கள்.

ஊரக வளர்ச்சித்துறையின் சார்பாக, மலைக்கிராமங்களில் நடைபெறவுள்ள சாலைப்பணிகளுக்கு, வனத்துறையினர் மூலம் உரிய அனுமதி பெற்று விரைவில் பணிகளை துவங்க சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள். மின்சாரத்துறை சார்பாக, மலைக்கிராமங்களில் அனைத்து பகுதிகளிலும் மின் இணைப்புகள் பழுது பார்த்தும், ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சி பகுதிகளிலுள்ள ஆபத்தான நிலையிலுள்ள மின்கம்பங்ளை மாற்றி, புதிய மின்கம்பங்கள் அமைத்தும், இடையூறாக உள்ள மரக்கிளைகளை அகற்றி, தடையின்றி மின்சாரம் கிடைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் அறிவுறுத்தினார்கள். நெடுஞ்சாலைத்துறை சார்பாக, அனைத்து ஊராட்சிகள், பேரூராட்சிகள் மூலம் நடைபெற்று வரும், சாலைப்பணிகளை விரைந்து முடித்திடவும் அறிவுறுத்தினார்கள். ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை சார்பாக, அனைத்து ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் அம்மா இளைஞர் விளையாட்டு மையங்களை உருவாக்க மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலருடன், விரைந்து செயல்படுத்திட சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

மாவட்டத்திலுள்ள அனைத்து பகுதிகளிலும் பழுதடைந்துள்ள குடிநீர் குழாய்களை சரிசெய்து, தேவையான இடங்களில் போர்வெல் அமைத்து, பொதுமக்களுக்கு தேவையான குடிநீர் தடையின்றி கிடைக்க உரிய நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தினார்கள். மாநராட்சி சார்பாக செயல்படுத்திவரும், கூட்டுகுடிநீர் திட்டங்கள், பாதாள சாக்கடை பணிகள் உள்ளிட்ட பணிகளை விரைந்து முடித்திடவும், வளர்ச்சித்திட்ட பணிகளை செயல்படுத்துவதில் இடையூறு ஏதும் இருந்தால் மாவட்ட ஆட்சித்தலைவர் கவனத்திற்கு எடுத்து சென்று திட்டமிட்ட பணிகளை விரைந்து முடிக்க வேண்டுமென சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் அறிவுறுத்தினார்கள்.

மேலும், கன்னியாகுமரி மாவட்டத்தில், கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு நடவடிக்கையாக ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சி பகுதிகளில், தடுப்பு பணிகளில் ஈடுபட்டு வரும் அனைத்து துறை அலுவலர்களும், பணியாளர்களும், அந்தந்த பகுதிகளிலுள்ள பொதுமக்களை கண்காணித்து, அவர்களுக்கு தொற்று அறிகுறிகள் (சளி, காய்ச்சல், இருமல்) இருந்தால், உடனே அவர்களை மருத்துவமனையில் சேர்க்க வேண்டும். மேலும், அப்பகுதிகளில் கிருமிநாசினிகள் தெளித்தும், கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளிலுள்ள பொதுமக்களுக்கு தேவையான பால், உணவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் தடையின்றி கிடைத்திடவும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். களப்பணிகளில் ஈடுபட்டுள்ள பணியாளர்களுக்கு முககவசங்கள், கையுறைகள் வழங்கி பாதுகாப்பான முறையில் பணி செய்வதை உறுதி செய்திட வேண்டுமெனவும் சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் அறிவுறுத்தினார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.இரா.ரேவதி, மாவட்ட வன அலுவலரும், அரசு ரப்பர் கழக பொதுமேலாளர் (பொ) திரு.அசோக்குமார் இ.வ.ப., நாகர்கோவில் மாநகராட்சி ஆணையாளர் திருமதி.ஆஷா அஜித் இ.ஆ.ப., உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.சி.எ.ரிஷாப், இ.ஆ.ப., நாகர்கோவில் கோட்டாட்சியர் திருமதி.அ.மயில், ஊரக வளர்ச்சித்துறை, சுகாதாரத்துறை, பொதுப்பணித்துறை (நீர்வளம், கட்டிடம், மின்சாரம்), குடிநீர் வடிகால் வாரியம், மின்சார வாரியம், தேசிய நெடுஞ்சாலைத்துறை, மாநகராட்சி, மாநகராட்சிகள், ஊராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் அனைத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.